# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற அவசரக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12ம் நாள் 2023ம் ஆண்டு 29.09.2023ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஓம்)திரு.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை — நகர்மன்றத்தலைவர்

நாள்: 26.09.2023 — அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1: ஆணையாளர் அவர்களது செப்டம்பர் 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 739

பதிவு செய்யப்பட்டது

பொருள்2: நகராட்சி பொறியாளர் அவர்களது செப்டம்பர் 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 740

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டவை

| | செப்டம்பர் 2023 |
|---|---|
| பிறப்பு | 66 |
| இறப்பு | 29 |
| இறந்து பிறந்தவை | 0 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

பதிவு செய்யலாம்

தீர்மான எண்: 741

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: அருப்புக்கோட்டை நகராட்சியில் கேங்கூலியாகப் பணிபுரிந்து 31.07.2022 அன்று ஓய்வு பெற்ற திரு.எல்.கருப்பசாமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WP(MD)No.9702/2023க்கு 25.04.2023 அன்று வரப்பெற்ற

**தீர்ப்பாணையை எதிர்த்து நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் மேல்முறையீடு செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கும் மேற்படி வழக்கிற்கு ஆகும் இதர கட்டண செலவினங்களுக்கும், நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் மற்றும் வாதாடுவதற்கும் வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வழக்கு செலவினங்கள் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.4418/2022/பி3

தீர்மான எண்: 742

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்5 : வருவாய் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 23, 24, 25 பகுதிகளில் புதிய LED விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 686, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Sri Sudharsana Engineering Works, Salem | 3.36 % மதிப்பீடுத் தொகையவிட அதிகமாக |
| 2. | M/s.Veena Enterprises Contractor,Gangaikondan | மதிப்பீட்டுத்தொகைக்கே |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள M/s.Veena Enterprises, Gangaikondan அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4230/2023/இ2

தீர்மான எண்: 743

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்6: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.ம) அரசாணை (நிலை) எண் 181 நாள் 19.09.2008ன்படி 2023-2026ம் ஆண்டிற்கான அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆண்டு குத்தகை இனமான சாலை ஓரங்களில் விற்கப்படும் அல்லது விற்பனைக்காக பரத்தி வைக்கப்படும் பொருட்களுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் குத்தகை உரிமத்திற்கு 22.09.2023 அன்று மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. ஏலக்கேள்விகள் மட்டுமே கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட ஏலக்கேள்விகளின் விபரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரரின் பெயர் | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|
| 1. | பா.சுரேந்தர் | ரூ.6,95,000/- |
| 2. | ஆர்.விக்னேஸ்வரன் | ரூ.6,90,000/- |

அலுவலகக்குறிப்பு:-

மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.6,95,000/- திரு.பா.சுரேந்தர் என்பவர் கோரியுள்ளார். இத்தொகையானது சென்ற ஆண்டு ஏலத்தொகை ரூ.6,15,195/-ஐ விட ரூ.79,805/- அதிகமாகவும் மூன்று ஆண்டு சராசரித் தொகை ரூ.5,86,365/-ஐ விட ரூ.1,08,635/- அதிகமாகவும் உள்ளது. எனவே திரு.பா.சுரேந்தர் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.6,95,000/-ஐ ஏற்று குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.10714/2014/அ1

தீர்மான எண்: 744

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்7: அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் முறையான மழைநீர் வடிகால் வசதிகள் இல்லாத காரணத்தினால் நகரின் தாழ்வான பகுதிகளான பூக்கடைபஜார், புதிய பேருந்து நிலைய வளாகம், விருதுநகர் ரோடு, திருச்சுழி ரோடு முதலான இடங்களில் அதிக மழை பொழிவின்போது மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. எனவே இந்நகராட்சி பகுதிகளான 1) மதுரை ரோடு பேருந்து நிலையம் முதல் மணிநகரம் ஓடை வரை, 2) பாரதிதாசன் தெரு NNT திட்டத்தின் கீழ் கழிப்பிடம் முதல் பெரியதெரு கண்மாய் வரை 3) நேதாஜி சாலை, 4) விருதுநகர் ரோடு பாம்பே மெடிக்கல் முதல் முரளி டீ கடை வரை, 5) மதுரை ரோடு நெசவாளர் காலனி பேருந்து நிறுத்தம் முதல் பேருந்து நிலையம் ஓடை வரை, 6) குழந்தைவேல்புரம் தெரு, 7) சண்முகநாதபுரம் முக்கிய ஓடை, 8) பந்தல்குடி ரோடு, 9) திருச்சுழி ரோடு சப்ரிஜிஸ்டர் அலுவலகம் முதல் M.S.கார்னர் வரை, 10) MDR நகர் 2வது தெரு தென்வடல் தெரு, 11) இரயில்நிலைய சாலை சிட்டி மருத்துவமனை முதல் ANUT மகால் வரை, 12) காந்திநகர் மெயின் ரோடு (காந்திநகர் பேருந்து நிறுத்தம் முதல் கணேஷ் நகர் பேருந்து நிறுத்தம் வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்குமாறு நகர்மன்றத்தலைவர் அறிவுரையின்படியும் மேற்கண்ட இடங்களில் மழைநீர் வடிகால் புணரமைப்பு பணி மற்றும் புதியதாக கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட போதிய தொழில்நுட்பம் அலுவலகங்களில் இல்லாத காரணத்தினால் விரிவான திட்ட அறிக்கை, வரைபடம் மற்றும் மட்ட அளவுகள் (Levels) முதலான பணிகள் செய்திட உள்ளூர்/வெளியூர் கலந்தாலோசகர்கள் மூலம் பணிகள் செய்திட விலைப்புள்ளி கோரியதின் அடிப்படையில் கீழ்கண்ட வாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விபரம் | விலைப்புள்ளி விபரம் (சதவீதத்தில்) |
|---|---|---|
| 1. | M/s.Glency Docmra,<br>Madipakkam, Chennai | 1.20% (Estimate Cost)<br>+ 18% GST |
| 2. | M/s.Dzyn Hub,<br>East Tambaram, Chennai – 26 | 1.75% (Estimate Cost)<br>+ 18% GST |

3. M/s.Eclat Design & Infrastructure Pvt., Ltd., 1.50% (Estimate Cost)
Lakshmi nagar, porur, Chennai – 16 + 18% GST

அலுவலகக்குறிப் :-

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான சதவீதம் கொடுத்துள்ள M/s.Glency Docmra, Madipakkam, Chennai நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5224/2023/இ1

**தீர்மான எண்: 745**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்8: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்து வந்த வாகன எண் TN 67 AH 8624 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுபித்து வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்க அரசாணை எண் 983, Home (Transport IV) நாள் 03.08.2004 கனரக வாகனங்களுக்கு 10 வருடங்களுக்கு மேல் பழுது பணிகள் பார்க்க வருடத்திற்கு ரூ.15000/- வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2,00,000/- ஆகும். மேற்படி வாகனமானது நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் கொண்டு செல்வதற்கு அதிகபடியாக பயன்பாட்டில் இருந்து வருவதால் தேய்மானம் அதிகமாகவும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உரிய பின்னேற்வு பெறுவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.4698/2023/எச்1

**தீர்மான எண்: 746**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்9: அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், கேங்கூலி, குழாய் பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள் ஆகியோர்களுக்கு 2023-2024ம் ஆண்டிற்கான சீருடைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.5185/2023/எச்1

**தீர்மான எண்: 747**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**10: **அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்** 1 **முதல்** 36 **வரையிலான வார்டுகளில்** 2023-2024**ம் நிதியாண்டிற்கு** 01.10.2023 **முதல்** 31.03.2024 **வரை வரி மற்றும் வரியில்லா இனங்களை வசூல் செய்வதற்கு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய** (**ஆட்டோ**, **ஒலிபெருக்கி**, **பேட்டரி வாடகை கூலி உட்பட**) **ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.**1,50,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

2023-2024ம் நிதியாண்டிற்கு வசூல் பணிக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5393/2023/அ2

**தீர்மான எண்: 748**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்11:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை வார்டுகளில் வாங்குவதற்கு பச்சை மற்றும் நீலக்கலர் சிறியளவு குப்பை கூடைகள் கொள்முதல் செய்வதற்கும் அதற்குண்டான செலவு ரூ.8.75 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 28.08.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பநத்தாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | A to Z Enterprises<br>6th Street, Puzhudivakkam<br>Chennai | ரூ.80/- |
| 2. | Ramana Enterprises<br>BKT Appartment Block A<br>1st Floor, Chennai – 61 | ரூ.76/- |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி ரூ.76/- அளித்த Ramana Enterprises, Chennai ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4701/2023/எச்1

**தீர்மான எண்: 749**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்12:** அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.07.2023 அன்று ஓய்வுபெற்ற திரு.வே.கொப்பையன் அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி அரசு மானியத் தொகை ரூ.10000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.2925/2023/பி3

**தீர்மான எண்: 750**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்13: அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை நாள் 03.07.2007ன்படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட அட்டவணை வரிசை எண் 1 முதல் 9 வரை உள்ள கடைகளுக்கு ஒன்பதாண்டு காலம் முடிவடைகிறது. ஆகவே மேற்படி கடைகளுக்கு ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலிருந்து தற்போதைய அங்காடி மதிப்பீடு, சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் மறுவாடகை நிர்ணயம் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தலைமையில் அமையப் பெற்ற மண்டல குத்தகை மறுசீராய்வுக் குழுவிற்கு அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பப்பட்டுது. 19.09.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மண்டல குத்தகை மறுசீராய்வுக் குழுவினரால் வாடகை தொகை நிர்ணயம் செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்றபடி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 19.09.2023ம் தேதிய செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண்.1263/2023/அ2 மூலம் அனுமதி வழுங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி கடைகளுக்கு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகை பற்றிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வரிவிதிப்பு எண் | கடை எண் | குத்தகை தாரர் பெயர் | ஏற்கனவே உள்ள மாத வாடகை | மண்டல குத்தகை மறுசீராய்வுக் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்ட வாடகைத் தொகை |
|---|---|---|---|---|---|
| பழைய பேருந்து நிலைய உள்பக்க கடைகள் | | | | | |
| 1 | 126/136 | கடை எண் 4 | பெருமாள்சாமி | 860 | 3640 |
| காரியம் தனுஷ்கோடி தெரு கடைகள் | | | | | |
| 2 | 126/2013003 | கடை எண் 3 | வரதராஜ் | 2156 | 2479 |
| 3 | 126/2013005 | கடை எண் 6 | வெங்கடேஷ் | 2142 | 2463 |
| 4 | 126/2013008 | கடை எண் 4 | கல்யாணி | 2195 | 2524 |
| 5 | 12602013009 | கடை எண் 9 | ஜெயகிருஷ்ணன் | 2195 | 2524 |
| டெலிபோன் ரோடு கடைகள் | | | | | |
| 6 | 126/2013016 | கடை எண் 1 | லட்சுமிசித்ரா | 3571 | 4107 |
| 7 | 126/2013017 | கடை எண் 3 | மலைராஜன் | 3306 | 3802 |
| 8 | 126/2013018 | கடை எண் 4 | பாஸ்கரன் | 2777 | 3194 |
| 9 | 126/2013019 | கடை எண் 5 | நாகராஜன் | 2777 | 3194 |

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி கடைகளுக்கு உரிமம் தொடங்கும் நாள் முதல் கேட்பு எழுப்பவும் மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.73/2019/அ1

**தீர்மான எண்: 751**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்14: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனமான TN 67 AH 8624 வாகனத்திற்கு பழுது பணிகள் பார்த்து தகுதிசான்று புதுப்பித்து தருவதற்கும் மேலும் அதற்கான செலவு தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 27.09.2023 அன்று விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Sri Sakthi Vinayagar Automobiles Madurai | ரூ.181565/- |
| 2. | Sadguru Motors Automobiles Madurai | ரூ.184179/- |
| 3. | A.S.R.Body Works Madurai | ரூ.177725/- |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த A.S.R.Body Works, Madurai ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு முன்அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4698/2022/எச்1

**தீர்மான எண்: 752**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்15: சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் வார்டு எண் 31 மீனாட்சி செட்டியார் தெருவில் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் நகராட்சிக்கு சொந்தமான கிணற்று பகுதியினை ஒட்டியுள்ள காலி இடத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. இப்பணியானது திரு.L.தாமோதரன் ஒப்பந்ததாரரால் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இப்பணி மேற்கொண்ட பொழுது மீனாட்சி செட்டியார் தெருவில் உள்ள பொதுக்கிணறு பகுதியினை ஒட்டி பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மூலமதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட 1.2 மீட்டர் ஆழத்திற்கு பதிலாக கூடுதலாக 1.5 மீட்டர் ஆழத்திற்கு அதாவது 2.7 மீட்டர் ஆழத்திற்கு மண்வேலை பணிகள் தளத்தின் தண்மைக்கேற்ப (According for Site Conditions) செய்து முடிக்கப்பட்டதன் காரணமாக

மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு பதிலாக ரூ.13,78,754/-க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கான கூடுதல் தொகையான ரூ.3,78,754/-யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5762/2022/இ1

தீர்மான எண்: 753

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்16: சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் வார்டு எண் 3ல் காந்திமைதானம் நியாயவிலைக்கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு கட்டப்பட்டது. இப்பணியானது திரு.L.தாமோதரன் ஒப்பந்ததாரரால் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணி மேற்கொள்ளும் போது மதிப்பீட்டில் வழிவகை இல்லாத பணிகளான SS Hand rall இனங்கள் மற்றும் மண்வேலை பணிகள் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்ட அளவு 1.2மீட்டருக்கு பதிலாக 1.5மீட்டர் அளவிற்கு அதாவது 0.3 மீட்டர் அறை கூடுதலாக தளத்தில் (According for Site Conditions) மண் வேலை, கான்கீரிட் பணிகள், சென்ட்ரிங் மற்றும் கம்பி வேலை ஆகிய பணிகள் முடிக்கப்பட்டதன் காரணமாக மதிப்பீட்டுத்தொகை ரூ.12,00,000/-க்கு பதிலாக ரூ.12,81,742/-க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கான கூடுதல் தொகையான ரூ.81,742/-யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ஒப்பநத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6744/2022/இ1

தீர்மான எண்: 754

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்17: சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் வார்டு எ ண் 3ல் காந்திமைதானம் அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு கட்டப்பட்டது. இப்பணியானது திரு.L.தாமோதரன் ஒப்பந்ததாரரால் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணி மேற்கொள்ளபட்ட இடமானது களிமண் (Clay Soil Center) இருந்ததால் மண் வேலை பணிகள் 2.7மீட்டர் ஆழத்திற்கு பணிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் குழந்தைகளுக்கான கழிவறை வசதிகள் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டதாலும், முன்புற சாய்வுதளப்பணிகள் (Ramp) மற்றும் SS Hand rail பணிகள் மூலமதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாததால், தளத்திற்கேற்ப (According for

site contition ) பணிகள் முடிக்கப்பட்டதன் காரணமாக மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு பதிலாக ரூ. 11,20,533/-க்கு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கான கூடுதல் தொகையான ரூ.1,20,533/-யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ஒப்பநத்தாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.448/2022/இ1

தீர்மான எண்: 755

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்18: இந்நகராட்சி வார்டு எண் 23 உச்சிசாமிகோவில் 7வது தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2022-23ன் கீழ் நியாயவிலைக்கட்டிடம் மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் திரு.A.P.மோகன்குமார், ஒப்பந்ததாரரால் பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இப்பணிகளை செய்யும் பொழுது தளத்தின் தன்மைக்கேற்ப (According for Site Conditions) சில அத்தியாவசிய பணிகளான 1) சாய்தளப்பணிகள், 2) Front hand arrangements 3) பேவர்பிளாக் தளம் ஆகிய பணிகள் செய்ய வேண்டிய அவசியத்தின் காரணமாகவும், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று மேற்கண்ட திட்டப்பணியினை செய்து வரும் திரு.A.P.மோகன்குமார் ஒப்பந்ததாரர் மூலம் கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும், அவ்வாறு மேற்கொண்டால் மூலமதிப்பீட்டுத்தொகை ரூ.1200000/-த்தினை விட கூடுதலாக ரூ.100857/-க்கு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணியில் மதிப்பீட்டுத்தொகையைவிட கூடுதலான தொகையான ரூ.100857/-யை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6744/2022/இ1

தீர்மான எண்: 756

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்19: இந்நகராட்சியில் மறுசுழற்சி கழிவுகள் சேகரிப்பு மையம் (Material Recovery Facilities - MRF)சுக்கிலநத்தம் குப்பை கிடங்கு வளாகத்தில் ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திரு.L.தாமோதரன் ஒப்பந்ததாரர் அவர்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை செய்யும் பொழுது சுக்கிலநத்தம் உரக்கிடங்கு வளாக பகுதி முழுவதும் குப்பை மேடாக இருந்ததன் காரணமாக மண்வேலை பணிகள் 9' – 0" அடி ஆழத்திற்கு Foundation Concrete பணிகள் செய்யப்பட்டது. இப்பகுதி முழுவதும் குப்பை

மேடாக இருந்தததன் காரணமாக Flooring Filling பணிகளை கிராவல் கொண்டு நிரப்பப்பட்டதாலும் மற்றும் வளாகத்தில் உட்புறம் Wooden play partion-segregation box ஆகிய கூடுதல் பணிகள் மூலமதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாததால் தளத்தின் தன்மைக்கேற்ப (According for Site Conditions) செய்யப்பட்டதில் மூலமதிப்பீட்டுத்தொகை ரூ.43,00,000/-க்கு பதிலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் கூடுதல் தொகை ரூ.468241/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் இருந்து ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7285/2022/இ1

தீர்மான எண்: 757

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்20: அருப்புக்கோட்டை நகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள கீழ்தள தொட்டியில் இருந்து மதுரை ரோடு, அஜீஸ் நகர், காந்திமைதானம் மற்றும் நேதாஜி வீதி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு மின்மோட்டார் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. அதுசமயம் புதுக்கடை பஜார் சாலை, திருச்சுழி ரோடு சாலை இணையும் (MS கார்னர் அருகில்) இணையும் இடத்தில் பாலத்திற்கு அடியில் உந்துகுழாய் உடைப்பு ஏற்பட்டு மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் நீரேற்றம் செய்ய இயலவில்லை. ஆகையால் மாநில நெடுஞ்சாலை துறை கட்டுப்பாட்டில் உள்ள திருச்சுழி சாலையில் குழாய் அமைந்துள்ள இடத்தில் பள்ளம் தோண்டி பராமரிப்பு பணி மேற்கொள்ள மாநில நெடுஞ்சாலைதுறைக்கு அனுமதிக்காக 09.08.2023ம் தேதிய இவ்வலுவலக கடிதத்தின்படி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, அருப்புக்கோட்டை அவர்களிடம் அனுமதி கோரப்பட்டதனை தொடர்ந்து, மேற்படி சாலையினை சீர்செய்யும் பணிக்கு கேட்புத்தொகையாக ரூ.30000/- யினை Divisional Engineer (H), C&M, Virudhunagar payable at Virudhunagar என்ற பெயரில் செலுத்தக்கோரி கடிதம் வரப்பெற்றது. அதன்படி மேற்படி பணியில் சாலையினை சீர்செய்வதற்கான கட்டணம் ரூ.30000/- செலுத்துவதற்கும், பணியினை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.1624/2023/இ1

தீர்மான எண்: 758

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்21: வருவாய் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 36 சுப்புராஜ் நகர் 12வது தெரு(126036R697), சுப்புராஜ் நகர் மெயின் குறுக்குத்தெரு (தென்வடல்) (126036R698), சுப்பராஜ் நகர் 13வது தெரு(126036R699), சுப்புராஜ் நகர் 14வது தெரு (126036R700), சுப்புராஜ் நகர் விரிவாக்கப்பகுதி (126036R587) ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 716, நாள் 29.08.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 27.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.92% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |
| 2. | திரு.K.காமாட்சிராஜன் அருப்புக்கோட்டை | 0.04% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.04% குறைவாக கொடுத்துள்ள திரு.K.காமாட்சிராஜன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4633/2023/இ1

**தீர்மான எண்: 759**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்22:** வருவாய் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 30 திருச்சுழி மெயின் ரோடு அண்ணாசிலை பகுதியில் சிறிய அளவில் Bio Toilet Mechanism முறையில் பெண்களுக்கு கழிப்பிட வசதி 1 எண்ணம், ஆண்களுக்கு 2 எண்ணம் சிறுநீர் கழிப்பிடவசதியும் மற்றும் 1 எண்ணம் Kisok box முறையில் Coffee Shop அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 731, நாள் 29.08.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 27.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Zuzu Smart Toilets Chennai | 1.58% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |
| 2. | M/s.Fibtec Enterprises Chennai | 0.05 மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.05% குறைவாக கொடுத்துள்ள M/s.Fibtec Enterprises அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4727/2023/இ1

**தீர்மான எண்: 760**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்23:** வருவாய் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 19 டெலிபோன் ரோடு சிங்காரத்தோப்பு பகுதியில் நவீன முறையில் Bio Toilet 4 எண்ணம் பெண்களுக்கான கழிவறை அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 734, நாள் 29.08.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 27.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | M/s.Zuzu Smart Toilets<br>Chennai | 1.58% மதிப்பீட்டு<br>தொகையைவிட அதிகமாக |
| 2. | M/s.Fibtec Enterprises<br>Chennai | 0.05 மதிப்பீட்டு<br>தொகையை விட குறைவாக |

அலுவலகக்குறிப்பு:-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.05% குறைவாக கொடுத்துள்ள M/s.Fibtec Enterprises அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4730/2023/இ1

**தீர்மான எண்: 761**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்24: குடிநீர் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி மதுரை ரோடு நடுநிலைப்பள்ளி, மேலரதவீதி நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் இராமசாமிபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மற்றும் பச்சை வண்ணம் எழுது பலககைகள் வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 705, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Deepthy Writooly Corp,<br>Madurai | 0.36% மதிப்பீட்டு<br>தொகையைவிட குறைவாக |
| 2. | M/s.Srivari Writool india Pvt., Ltd.,<br>Madurai | 0.01% மதிப்பீட்டு<br>தொகையை விட குறைவாக |

அலுவலகக்குறிப்பு:-

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.36% குறைவாக கொடுத்துள்ள M/s.Deepthy Writooly Corp அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4222/2023/இ1

**தீர்மான எண்: 762**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்25: குடிநீர் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு தேவையான குளோரின் கேஸ் சிலிண்டர்கள் ஒருவருடத்திற்கு தேவையான

அளவு வாங்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 706, நாள் 31.07.2023ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.R.K.Enterprises Palakkad | 0.11% மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக |
| 2. | M/s.Perfect Treading Complany Coimbatore | 0.34% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.11% குறைவாக கொடுத்துள்ள M/s.R.K.Enterprises, Palakkad அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4202/2023/இ1

தீர்மான எண்: 763

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்26: கல்வி நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நரகாட்சி நெசவாளர் காலனி நகராட்சி துவக்கப்பள்ளிக்கு பச்சை வண்ண எழுது பலகைகள் வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 704, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Srivari Writool India(P) Ltd., Madurai | 0.24% மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக |
| 2. | M/s.Deepthy Writools Corp, Madurai | 0.53 மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.53% குறைவாக கொடுத்துள்ள M/s.Deepthy Writooly Corp., Madurai அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.4221/2023/இ1

தீர்மான எண்: 764

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்27: வருவாய் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 3 அன்புநகர் 3வது தெரு வார்டு எண் 5 பெரியார் நகர் 2வது தெரு மற்றும் வார்டு எண் 28 வர்த்தக சங்கம் தெரு உள்ள மினிபவர் பம்ப் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 688, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.R.காஜாபக்ருதீன் பாதுஷா அருப்புக்கோட்டை | 0.02% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 1.40 மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.02% குறைவாக கொடுத்துள்ள திரு.R.காஜாபக்ருதீன் பாதுஷா அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4217/2023/இ1

தீர்மான எண்: 765

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்28: குடிநீர் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தேவைப்படும் அடிகுழாய் உதிரிபாகங்கள் வாங்கும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 685, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 1.65% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.S.சங்கரன் அருப்புக்கோட்டை | 0.02 மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

அலுவலகக்குறிப்பு:-

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.02% குறைவாக கொடுத்துள்ள திரு.S.சங்கரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.4227/2023/இ1

தீர்மான எண்: 766

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்29: குடிநீர் வடிகால் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 13 பாம்பலம்மன் கோவில் தெரு மற்றும் வடக்கு துரைராஜபுரம் ஆகிய தெருக்களில் சிறுமின்விசை பம்பு கட்டிடங்களில் புனரமைப்பு பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 689, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.சங்கரன் அருப்புக்கோட்டை | 0.001% மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக |
| 2. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 0.37 மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

அலுவலகக்குறிப்பு:-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டுத்தொகையைவிட 0.001% குறைவாக கொடுத்துள்ள திரு.S.சங்கரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4218/2023/இ1

**தீர்மான எண்: 767**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்30: வருவாய் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு 8வது ஜவஹர்சங்க தெருவில் நியாய விலை கட்டிடத்திற்கு கூடுதல் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.05 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 702, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 5.03% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.K.காமாட்சிராஜன் அருப்புக்கோட்டை | 0.09 மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

அலுவலகக்குறிப்பு:-

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.09% குறைவாக கொடுத்துள்ள திரு.K.காமாட்சிராஜன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.3851/2023/இ1

**தீர்மான எண்: 768**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்31: வருவாய் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 35 ராமசாமிபுரம் கிழக்கு கண்மாய்கரையில் உள்ள சிறுவிசை மினிபவர் பம்பிலிருந்த ராமசாமிபுரம் தெருவிற்கு செல்லும் பகிர்மான குழாயினை சரிசெய்யும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 691, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 0.32% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.89% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.32% குறைவாக கொடுத்துள்ள திரு.L.தாமோதரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4220/2023/இ1

**தீர்மான எண்: 769**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்32: வருவாய் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 35 இராமசாமிபுரம் காலனித்தெருவில் உள்ள சமுதாயக்கூடத்தில் மராமத்து பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 663, நாள் 30.06.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 0.05% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.96% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.05% குறைவாக கொடுத்துள்ள திரு.L.தாமோதரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2727/2023/இ1

**தீர்மான எண்: 770**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்33: வருவாய் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 6 சௌந்திரபாண்டியன் காம்பவுண்ட் மெயின் தெருவில் அமைந்துள்ள பூங்காவில் புணரமைப்பு பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 681, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 0.01% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 1.04% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.01% குறைவாக கொடுத்துள்ள திரு.L.தாமோதரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4210/2023/இ1

**தீர்மான எண்: 771**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்34: குடிநீர் வடிகால் நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 17 நாகலிங்க நகர் வார்டு எண் 10 காட்டுபாவா தெரு கிழக்கு மற்றும் வார்டு எண் 35 துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள உபயோகமற்ற சிறுவிசை மினிபவர்பம்பு கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.0.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 690, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.சங்கரன் அருப்புக்கோட்டை | 0.22 மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக |
| 2. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 1.80 மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.22% குறைவாக கொடுத்துள்ள திரு.S.சங்கரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.4219/2023/இ1

தீர்மான எண்: **772**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்35: கல்வி நிதி 2023-24ன் கீழ் வார்டு எண் 4ல் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் சத்துணவு கூடம் மற்றும் சமையல் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டித்தரும் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.8.25 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 692, நாள் 31.07.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 1.78% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.04% மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 1.78% குறைவாக கொடுத்துள்ள திரு.L.தாமோதரன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4223/2023/இ1

**தீர்மான எண்: 773**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்36: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கட்டங்குடி நீர்உந்து நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்தவகையில் விளம்பரக்கட்டணம் ரூ.88150/-ஐ Bright Advestising, Chennai. நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6750/2022/இ1

**தீர்மான எண்: 774**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்37: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 35 இராமசாமிபுரம் மெயின் தெருவில் உள்ள வாறுகால் சேதமடைந்து நீர்தேங்கி சுகாதாரகேடு ஏற்படுவதாக அதனை சரிசெய்து தருமாறு பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டது. இப்பணி மேற்கொள்வது அவசியமாகும். எனவே வார்டு எண் 35 இராமசாமிபுரம் மெயின் தெருவில் வாறுகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4936/2023/இ1

**தீர்மான எண்: 775**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி